# விபச்சாரத்தின் தாய்ச்சபை சினிமா

அய்யா, நாச்சிக்குளம்

தினந்தோறும் செய்திதாளை எடுத்து விரித்து படித்துக்கொண்டிருந்தால் அதில் என்ன மாதிரி செய்திகள் அதிகமாக வருகிறது என்றால் பெண்ணை காணவில்லை; இளம்பெண் மாயம்; இளம் காதல் ஜோடிகள் வீட்டை விட்டு அல்லது ஊரை விட்டு ஓட்டம்; காதல் ஜோடிகள் போலீஸ் நிலையத்தில் தஞ்சம் (போலீஸ் பெற்றோர்களுடன் சமாதானம் பேசி திருமணம் முடித்து வைத்தல்); காதல் தோல்வியில் இளம் பெண் அல்லது இளம் வாலிபர் தற்கொலை; காதல் பிரச்சனையால் கொலை; காதல் ஜோடிகள் கோயிலில் திருமணம் பெற்றோர்களுக்கு தெரியாமல்; வேளைக்கு போன பெண் அல்லது பள்ளிக்கு படிக்கப்போன பெண் வீட்டிற்கு வரவில்லை; இது அப்படியே இன்னும் நீண்டு கொண்டே போகிறது.

இதெல்லாம் நவீன காலத்திற்கு தகுந்தாற்போல் நடக்கிற நிகழ்ச்சியாகும். அதுவும் விஞ்ஞான காலத்தில் இது சர்வசாதாரணமாக நடக்கிறது. இதில் எல்லா மதங்களும் ஒன்று சேர்ந்து கொள்கிறது. எம்மதமும் சம்மதம் என்பது இவ்விஷயங்களுக்கு பொருந்துகிறது. நல்லா இருந்த மனித வர்க்கம் இந்த மாதிரி விஷயங்களுக்கு தள்ளப்படுகிறது என்றால் அதற்கு பின்னாரு ஏதோ ஒரு மாபெரும் சக்தி இயக்கி கொண்டிருக்கிறது; அது எந்த சக்தி என்று நாம் ஆழ்ந்து உற்றுநோக்குவோமானால் அது சினிமாவாகத்தான் இருக்கிறது.

சினிமா பார்ப்பதற்கு அழகாகவும், ரசனையாகவும், இனிமையாகவும், ஜாலியாகவும் இருக்கும். ஆனால் அதன்பிறகு வரக்கூடிய பின்விளைவுகள் என்பது நாம் ஆரம்பத்தில் பட்டியல் போட்டு காட்டிருக்கிற விஷயங்களாகத்தான் நடக்கிறது. ஆகையால் சினிமா என்பது மனித சமுதாயத்திற்கு பெரும் வழிகேடு சாதனமாகத்தான் திகழ்கிறது. இதை உலக பொதுப்பட விஷயமாக பார்ப்பதை விட்டு விட்டு நம் இஸ்லாமிய சமுதாயம் இதனால் எந்த அளவு பாதித்துள்ளது என்பதை இன்ஷா அல்லாஹ்! இக்கட்டுரையில் காணப்போகிறோம்.

முஸ்லிம் சமுதாயம் முன்னேறாமல் இருப்பதற்கு இந்த சினிமாவும் ஒன்றாகத்தான் திகழ்கிறது. காரணம் ஒரு பள்ளிவாசலையும், ஒரு சினிமா தியேட்டரையும் எடுத்துக்கொண்டு எங்கே முஸ்லிம்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கணக்கு போட்டு பார்த்தால் சினிமா தியேட்டரில்தான் அதிகமாக இருக்கிறார்கள். இப்போது வீடுகளில் உள்ள கேபிள் டி.வி.யில் கூட 24 மணி நேரமும் சினிமா ஒளிபரப்புவதால் வீடுகூட ஒரு மினி சினிமா தியேட்டர் என்றுதான் சொல்லலாம். இதனால் முஸ்லிம் சமுதாயம் இஸ்லாத்தைப்பற்றி அறிந்துக் கொள்ளுவதைவிட சினிமா என்ற ஷைத்தானைப் பற்றித்தான் அதிகமாக அறிந்து வைத்திருக்கிறார்கள். இதனால் என்ன ஆகிறது ஒழுக்கமாக இருக்கவேண்டும் சமுதாயம் விபச்சாரத்தின் பக்கம் முன்னோக்கி சென்று கொண்டிருக்கிறது. காரணம் இஸ்லாத்தின் கொள்கையை பொறுத்தவரையில் ஒரு மனிதன் ஆபாசத்தை ஏறெடுத்து பார்க்கிறான் என்றால் அவனின் கடைசி முடிவு விபச்சாரமாகத்தான் இருக்கும். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு முடிவு உண்டு; அதேப்போல சினிமாவின் முடிவு விபச்சாரம் ஆகும். இப்போது உலகத்தில் விபச்சாரம் கொடிகட்டி பறப்பதற்கு காரணமாக இருப்பது சினிமாவாகத்தான் இருக்கிறது.

**விபச்சாரன், விபச்சாரியையோ அல்லது இணை வைத்து வணங்குபவளையோ அன்றி வேறு எந்தப் பெண்ணையும் விவாகம் செய்யமாட்டான்; விபச்சாரி, விபச்சாரனையோ அல்லது இணை வைத்து வணங்குபவனையோ அன்றி (வேறு யாரையும்) விவாகம் செய்யமாட்டார் இது முஃமின்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறது.** *அல்குர்ஆன் 24:3*

இன்றைக்கு கணவன் மனைவி சேர்ந்துக்கொண்டு சினிமா பார்க்கிறார்கள் என்றால் அல்லாஹ் குர்ஆனில் சொல்லியுள்ளப்படி விபச்சாரன் விபச்சாரி என்ற அடிப்படையில்தான் ஜோடிப் பொருத்தமாக அமைத்திருக்கிறார்கள் என்று நாம் எண்ண வேண்டியுள்ளது. இது அவர்களோடு மட்டும் முடிவடையாது அல்லாமல் அவர்களுக்கு பிறக்க கூடிய பிள்ளைகளையும் அருகில் வைத்துக்கொண்டு சினிமா பார்க்கும்போது அவர்களின் வழியில் செல்லக்கூடிய வாரிசுகளுக்கு கோடு போட்டு கொடுக்கிறார்கள். பிறகு பிள்ளைகள் அந்த வழியில் பாதை அமைத்துக் கொள்கிறார்கள். இது அப்படியே வாழையடி வாழையாக தொடர்ந்துக்கொண்டே போகிறது.

ஒரு தனி மனிதன் என்று சொல்லுவதை விட ஒரு குடும்பமே டி.வி.யின் முன் அமர்ந்துக் கொண்டு சினிமாவை கண்டுகளிக்கிறார்கள். இப்படிப்பட்ட குடும்பங்கள் இஸ்லாமிய பிரச்சார சபைகளில் கலந்துக்கொண்டிருந்தால் இன்னேரம் முஸ்லிம் சமுதாயம் முன்னேற்றத்தில் எங்கேயே போயிருக்கும். சமுதாயம் சிந்தித்து பார்ப்பதற்கு தயாரில்லை. இதனால் ஒரு அநாகரீகமான முறையில்தான் நிறைய இஸ்லாமிய குடும்பங்கள் போயிகொண்டிருக்கிறது. அது ஒட்டு மொத்த முஸ்லிம் சமுதாயத்தையே பாதிக்கிறது. ஆகையால் நாம் அவர்களிடம் சினிமாவின் தீமையைப்பற்றி எடுத்துச் சொன்னால் அந்த காதில் வாங்கி இந்த காதில் விட்டு விடுகிறார்கள் அல்லது செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்கிறது அல்லது எறுமை மாட்டில் பெய்த மழையாகத்தான் இருக்கிறது.

**ஆபாசத்தை கண்ணால் பார்ப்பது கண் செய்யும் விபச்சாரமாகும்; காதால் கேட்பது காது செய்யும் விபச்சாரமாகும்; கையால் தொடுவது கை செய்யும் விபச்சாரம்மாகும்; வாயால் பேசுவது வாய் செய்யும் விபச்சாரமாகும். இவை எல்லாவற்றையும் மர்மஸ்தான உருப்பு உண்மைபடுத்தும் அல்லது ஒதுக்கித்தள்ளி விடும்.** *ஹதீஸ்*

இத்தனை அம்சங்களும் ஒருங்கிணைக்கப் பட்டதுதான் சினிமா என்ற சாதனம் ஆகும். சினிமாவில் தான் விபச்சார காட்சிகள் என்றால் டி.வி. சீரியல்களிலும், விளம்பரங்களிலும் ஆபாச காட்சிகள் அள்ளி வீசப்படுகிறது. ஆகையால் ஆபாசம் என்பது ஷைத்தானின் சாதனம் ஆகும். மேலும் ஒரு முஃமினான் முஸ்லிம் இறைவன் வழியில் செல்வதற்கு முயலுனுமே தவிர ஷைத்தானிய வழியில் செல்வதற்கு முயலக்கூடாது. இறைவழியில் செல்வது சமுதாயத்தின் முன்னேற்றம் ஆகும்; ஷைத்தான் வழியில் செல்வது சமுதாயத்தின் வழிகேடு ஆகும். அடுத்து தினசரி பேப்பர்களில் என்ன செய்திகள் வருகிறது என்றால் டி.வி. சீரியல் நடிகை அல்லது சினிமா நடிகை தற்கொலை; அவர்களுடைய டைரியின் பக்கங்களை புரட்டி பார்த்தால் தினந்தோறும் இரவில் வந்து சென்ற முக்கிய பிரமுகர்களின் பெயர்கள்; விபச்சார வழக்கில் டி.வி. சீரியல் நடிகை அல்லது சினிமா நடிகை கைது, முக்கிய அரசியல் பிரமுகர்கள், தொழில் அதிபர்களுடன்,

ரவுடிகளுடன நடிகைகள உலலாசம; இதுவும அபபடிெய நணடு ெகாணெட ெபாகறது.

ஆக நடிகர் நடிகை என்ற விபச்சார கூத்தாடி வர்க்கங்கள் மனித சமுதாயத்தையே வழிகெடுத்து குட்டி சுவராக்கி அழித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படியாப்பட்ட கூத்தாடிகளின் நிழல் ஒரு முஸ்லிம் வீட்டில் பாடுவது அது ஷைத்தானிய வீடாகத்தான் இருக்கவேண்டும்.நூஏற்கனவே முஸ்லிம் சமுதாயம் கல்வியில் பின்தங்கியிருக்கிறது. நிலைமை இவ்வாறு இருக்கும் போது பள்ளியில் படிக்கிற குழந்தை செல்வங்களையும், மேற்படிப்பு படிக்கிற மாணவ, மாணவிகளையும் எல்லோரையும் வைத்துக்கொண்டு டி.வி.யில் சினிமா பார்க்கிற பெற்றோர்கள் தாங்கள் பிள்ளைகளை கல்வி வழியில் ஊக்கப்படுத்துவதை விட்டு விட்டு ஷைத்தானிய சினிமா வழியில் ஊக்கப்படுத்துகிறார்கள் என்றால் அவர்கள் மனித சமுதாயத்தின் வழிகெட்ட பயனற்ற பெற்றோர்களாகத்தான் இருக்கவேண்டும். அதாவது கல்வியின் சிறப்பை அறியாத மண்ணாங்கட்டி பெற்றோர்கள் ஆவார்கள். ஆக அவரவர்கள் பிள்ளைகளை கெடுப்பது அவரவர்கள் பெற்ரோர்கள்தான் என்பது இதன் மூலம் தெரியவருகிறது.

பிள்ளைகளை அருகில் வைத்துக்கொண்டு பெற்றோர்கள் சினிமா பார்ப்பதால் பிற்பாடு பிள்ளைகள் பருவம் வந்தப் பிறகு காதல் வலையில் சிக்கி திருமணத்திற்கு முன் குழந்தையை பெற்றெடுப்பது அல்லது கரு கலைப்பது மேலும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் சேரியில் இருக்கும் ஜோடிகளை இழுத்துக்கொண்டு ஓடுவது அல்லது திருமணம் முடிப்பது அல்லது ஊர் சுற்றுவது இதெல்லாம் பெற்றோர்களுக்குத்தான் தலை குனிவு ஏற்படுகிறது. இதெல்லாம் நல்ல குடும்பம் ஒரு அநாகரீகமான வழியில் செல்வதற்கு சினிமா வழிகாட்டுகிறது. ஆகையால் இதன் மூலம் நாம் என்ன சொல்கிறோம் என்றால் கல்வியை ஊக்கப்படுத்துகிற அறிவு பூர்வமான நிகழ்ச்சிகளை குடும்பத்துடன் டி.வி.யில் பாருங்கள். அதை விட்டு வழிகெட்டு குட்டிச்சுவராக போகிற ஹராமான சினிமாவை பார்த்துக்கொண்டிருந்தால் அங்கே நிச்சயமாக கேபிள் மேலே டி.வி. என்ற பெயரில் ஒரு பெரிய ஷைத்தானை பிடித்து வைத்து கண்ணியப்படுத்துகிறார்கள். ஷைத்தானை கண்ணியப்படுத்துவது ஒரு முஃமினான முஸ்லிமின் வேலை கிடையாது. ஆகையால் அந்த நேரத்தில் வீட்டை விட்டு டி.வி.யை அப்புறப்படுத்துவது என்பது ஒரு பெரிய ஷைத்தானை எட்டி உதைத்து வெளியே தள்ளி கதவை சாத்துவதற்குச் சமம் ஆகும். டி.வி.யில் சினிமா பார்க்கிற கேடுகெட்ட முஸ்லிம் சமுதாயம் இதை செய்யுமா?

**நிச்சயமாக கண், காது, இதயம் இவைகள் ஒவ்வொன்றும் அதனைப்பற்றி மறுமையில் விசாரிக்கப்படும்.**
*அல்குர்ஆன் 17:36*

இந்த குர்ஆனின் ஆயத்துப்படி சினிமா பார்க்கிற ஜென்ம ஆசாமிகள் மறுமையில் இறைவனின் கேள்வி கணக்கு விசாரணை மன்றத்தில் எப்படி தப்பித்துக் கொள்ள போகிறார்களோ எல்லாம் இறைவனுக்கே வெளிச்சம்.

மேலும் சினிமா பார்க்கும் முஸ்லிம் குடும்பங்களை நாம் நோட்டம் விடுவோமானால் அங்கே தொழுகை இருக்காது, குர்ஆன் ஓதமாட்டார்கள், திக்ர் துஆ செய்யமாட்டார்கள், இஸ்லாமிய கொள்கைகள் அடங்கிய ஆடியோ, விடியோ சி.டி., இவைகளை எல்லாம் போடு கேட்கமாட்டார்கள். அதாவது இஸ்லாத்தின் வாடகையே அங்கே இருக்காது. இதனால் ஷைத்தான்தான் அங்கே குடிகொண்டு ஆட்டிப்படைத்து அதிகாரம்

பண்ணிக் கொண்டு இருப்பான். ஷைத்தானின் ஆதிக்க பிடியில் அழிச்சாட்டியம் பண்ணிக்கொண்டிருப்பார்கள். மேலும் இஸ்லாத்திற்கு அங்கே வேலை இல்லை. ஒரு பெயர் தாங்கி முஸ்லிம் குடும்பமாகத்தான் காட்சியளித்துக் கொண்டிருக்கும். இதனால் காஃபிர் குடும்பத்திற்கும் முஸ்லிம் குடும்பத்திற்கு வித்தியாசம் இல்லாமல் போகிறது. காரணம் ஷைத்தானை வழிபடுகிற இடத்தில் அங்கே இஸ்லாத்திற்கு வேலை இல்லை.

சினிமாவில் நல்ல கதை அம்சங்கள் உள்ள படங்களும் உண்டு அதை மட்டும் பார்க்கலாம் அல்லவா என்று நிறை பேர் சொல்கிறார்கள்; சாக்கடையில் நல்ல சாக்கடை, கெட்ட சாக்கடை என்று தரம் பிரித்தாலும் எல்லாம் மொத்தத்தில் ஒரே நாத்தம்தான். ஆகையால் நாத்தத்தை ஒன்று ஓரம் கட்டவேண்டும் அல்லது அப்புரப்படுத்த வேண்டும். அதே போலத்தான் சினிமாவை தரம் பிரிக்காமல் மொத்தமாக ஒதுக்கி புறந்தள்ள வேண்டும்.

சினிமாவில் ஒரு சில நல்ல நடிகர்கள் நடிகைகள் இருக்கிறார்கள் அவர்கள் நடிக்கும் படங்களை மட்டும் பார்க்கலாம் அல்லவா என்றும் சொல்கிறார்கள்; சினிமா என்ற விபச்சார தொழிலில் நல்ல விபச்சாரன், நல்ல விபச்சாரி என்று தரம் பிரிப்பது போலாகத்தான் இருக்கிறது. விபச்சாரத்தை தேர்ந்தெடுத்தால் அதன் முடிவு எய்ட்ஸ் என்ற ஹராமான பரிசு மழை வியாதிதான் கிடைக்கும். ஹராமான வியாதி ஹராமான மவுத்தைத்தான் தழுவ நேரிடும். ஹராமான மவுத்து நரகத்திற்குத்தான் இட்டுச் செல்லும்.

பொழுது போக்கிற்காக சினிமா பார்க்கலாம் அல்லவா என்றும் செல்கிறார்கள்; ஒரு முஸ்லிமுக்கு ஓய்வு நேரம் என்பது அல்லாஹ் கொடுத்த அருட்கொடைகளில் ஒன்றாகும். அதை நல்ல வழியில் இஸ்லாமிய கொள்கை பிறகாரம் ஒவ்வொரு நொடியையும் செலவு செய்யவேண்டும். அதாவது தொழுவது, குர்ஆன் ஓதுவது, திக்ர் துஆ செல்வது, இஸ்லாமிய புக்குகள் படிப்பது, ஆடியோ, விடியோ சி.டி போன்றவற்றின் மூலம் இஸ்லாமிய பிரச்சார கொள்கைகள் கேட்பது போன்ற நல்ல அமல்களில் ஈடுபட்டாலே அதுவே நல்ல வழியாகும். இதன்மூலம் இறைவன் வழியில் பொழுதை போக்கும் பொழுது இம்மையிலும் மறுமையிலும் நமக்கு நல்வழி கிடைக்கிறது. ஆகையால் ஹராமான சினிமாவை நாம் பார்த்துக் கொண்டிருந்தால் நம்முடைய வாழ்நாள் ஹராமான வழியில்தான் செல்ல நேரிடும். மற்றவர்கள் நம்மை பார்த்து 'ஹராமி' என்று அடைமொழியிட்டு அழைத்தாலும் அன்பான முறையில் நாம் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சினிமாவை நாம் ஒரு ஜாலிக்காகத்தான் பார்க்கவேண்டுமே தவிர அதை மனதளவில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் சொல்கிறார்கள்; கணவன், மனைவியும் அன்பாக நடப்பதும் ஒரு ஜாலித்தான்; பொற்றோர்கள் பிள்ளைகள் அன்பான முறையில் நடப்பதும் ஒரு ஜாலித்தான்; உறவினர்கள் நண்பர்களுடன் அன்பான முறையில் நடப்பதும் ஒரு ஜாலித்தான்; இவையெல்லாம் மனதளவிற்கு ரொம்ப மகிழ்ச்சியை தரும். மேலும் சாந்தி சமாதானம் என்பது இங்கேதான் அடங்கியிருக்கிறது. இந்த இயற்கையான நிஜம் ஹலாலான வழியில் நடக்கக்கூடிய ஜாலியை விட்டு விட்டு ஏன் விபச்சார கூத்தாடிகள் கொட்டம் அடிக்கிற ஹராமான நிழல் செயற்கை ஜாலி என்ற சினிமாவை பார்க்கவேண்டும்? இந்த ஹராமான ஜாலிதான் பின் விளைவு விபச்சாரத்தில் கொண்டு போய் விட்டு எயிட்ஸ் என்ற உடம்பளவு ஹராமான நோயை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் மனதளவு அசிங்கம்பட்டு நரக வாழ்க்கை

வாழவேண்டியதுதான்.

ஆகையால் சினிமாவின் அடுத்த முடிவு விபச்சாரம்தான் இதனால் சினிமாவின் பிரதிபலன் வேறு ஒன்றும் இல்லை. ஆதலால் சினிமா என்பது விபச்சாரத்தின் தாய்ச்சபையாக இருக்கிறது. இந்த சினிமாவை நாம் ஏறெடுத்து பார்க்காமல் ஒதுக்கி புறக்கணித்து எட்டி உதைத்து தள்ளவேண்டும்.

ஹராமான சினிமா என்ற ஷைத்தானை விட்டொழிப்போம்! ஹலாலான இறைவன் வழியில் சீர் பெறுவோம்!!.